செய்தி வெளியீடு எண் :44 நாள் :25.09.2017

**தேனி மாவட்டம்,**
**பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா நடைபெறவுள்ள இடத்தினை மாண்புமிகு தமிழநாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்:-**

*********

தேனி மாவட்டம், வீரபாண்டி பேரூராட்சியில் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா (04.11.2017) அன்று நடைபெறவுள்ள இடத்தினை இன்று (25.09.2017) மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது, பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவிற்கான மேடை மற்றும் பந்தல் அமையவுள்ள இடம், அமைச்சர் பெருமக்கள், சிறப்பு விருந்தினர்கள், பொதுமக்கள் மற்றும் பயனாளிகள் அமருமிடம், கழிப்பறை, குடிநீர் வசதிகள் ஏற்படுத்திட அமைத்து தரப்படும் இடம், மருத்துவ குழு, தீயணைப்பு வாகனங்கள், பாதுகாப்பு வாகனங்கள், விழாவிற்கு வருகை தரும் அமைச்சர் பெருமக்கள், முக்கிய பிரமுகர்கள் மற்றும் பொதுமக்களின் வாகனங்கள் நிறுத்துவதற்கான இடம் ஆகியவற்றை தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்விற்குப்பின், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்கையில், பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் உயரிய லட்சியத்தினையும், சிறப்பினையும் நினைவுகூறும் வகையில் நமது மாவட்டத்தில் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா (04.11.2017) அன்று நடைபெறவுள்ளது. இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள். இவ்விழாவிற்கு வீரபாண்டி பேரூராட்சிக்குட்பட்ட போஜராஜா மில் மைதானம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. விழாவிற்கான மேடை மற்றும் பந்தல் அமைக்கும் போது அனைத்துவிதமான அடிப்படை வசதிகளை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்தார்.

இந்தஆய்வின்போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.வீ.பாஸ்கரன் அவர்கள், தேனி பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஆர்.பார்த்திபன் அவர்கள், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜக்கையன் அவர்கள், பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் (பொ) திருமதி.கிருஷ்ணவேணி அவர்கள் உட்பட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**